இந்து தமிழ்
THE HINDU

# காடுகள் அழிப்பு காரணமாக ஆண்டுக்கு 1,500 கோடி மரங்கள் இழப்பு

## வன மரபியல், மரப்பெருக்கு நிறுவன மூத்த விஞ்ஞானி வேதனை

கோவை

காடுகள் அழிப்பு காரணமாக ஆண்டுக்கு சுமார் 1,500 கோடி மரங்களை நாம் இழந்து வருகிறோம் என வன மரபியல், மரப்பெருக்கு நிறுவன மூத்த விஞ்ஞானி வேதனை தெரிவித்தார்.

பூமி நாளை (ஏப்.22) முன்னிட்டு, கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள வன மரபியல், மரப்பெருக்கு நிறுவனத்தில் (ஐஎஃப்ஜிடிபி) செயல்பட்டு வரும் சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையம் (என்விஸ்) சார்பில், முகநூல் நேரலையில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

இதில் என்விஸ் ஒருங்கிணைப்பாளரும், முதுநிலை விஞ்ஞானியுமான கண்ணன் சி.எஸ். வாரியர் பேசும்போது, “மனித நாகரிகத்தின் தொடக்கத்திலிருந்து உலகளவில் 46 சதவீத மரங்களை அழித்துவிட்டோம். மேலும், காடுகள் அழிப்பு காரணமாக ஆண்டுக்கு சுமார் 1,500 கோடி மரங்களை இழக்கிறோம். நிலப்பரப்பை அடிப்படையாகக் கொண்ட தாவரங்கள், மரவகைகளில் 20 சதவீதம் குறைந்துவிட்டன. தவறான தாவர, மர வகைகளை நடுவது அல்லது தவறான இடங்களில் நடுவது சுற்றுச்சூழலுக்கும், உயிரினங்களுக்கும் நன்மையைவிட தீமையையே அளிக்கிறது.

> ▼ பிராந்திய பல்லுயிர் பெருக்கத்துக்கான திட்டமிடலில் கோயில் காடுகள் பற்றிய ஆய்வுகள் நமக்கு உதவுகின்றன.

எனவேதான், கோயில் காடுகள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. பிராந்திய பல்லுயிர் பெருக்கத்துக்கான திட்டமிடலில் கோயில் காடுகள் பற்றிய ஆய்வுகள் நமக்கு உதவுகின்றன. இதன்மூலம் அந்தந்த பகுதிகளுக்கு தகுந்த மர வகைகளை தேர்ந்தெடுக்க முடியும்" என்றார்.

ஐஎஃப்ஜிடிபி இயக்குநர் சி. குன்னி கண்ணன் பேசும்போது, "காற்று, நீர், நிலம், தாதுக்கள், தாவரங்கள், விலங்குகள் உள்ளிட்ட பூமியின் இயற்கை வளங்களை சரியான வழியில் பயன்படுத்த வேண்டும். இவற்றை எதிர்காலத்துக்காக நாம் பாதுகாக்க வேண்டியது அவசியம். இந்த வளங்களை திறமையாக பயன்படுத்தினால்தான் கழிவுகளை குறைத்து, இயற்கை வளங்களை நிர்வகிக்க முடியும்" என்றார்.

நிகழ்வின் ஒருபகுதியாக மாணவர்கள், பொதுமக்களுக்கான ஆன்லைன் விழிப்புணர்வு விநாடி-வினா போட்டி நடைபெற்றது. இதில் பங்கேற்ற அனைவருக்கும் மின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. என்விஸ் மூத்த திட்ட அலுவலர் எஸ்.விக்னேஸ்வரன் நன்றி கூறினார்.

24. News in Hindu Tamil, 25.04.2021, Coimbatore, observance of Earth Day by IFGTB ENVIS.